இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பள்ளிக்கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017/2018
**ESC2219/EPA2419** – முன்பிள்ளைப் பருவத்தில் விளையாட்டு
இறுதிப்பரீட்சை - 2018
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி: 29.12.2018 நேரம்: பி.ப 01.30 – பி.ப 04.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

## பகுதி I

01. முன்பள்ளிப் பிள்ளைகட்கு நடைமுறைப்படுத்தக்கூடிய விளையாட்டுச் செயற்பாடுகள் ஐந்தை (05) பெயரிடுக.

02. "கண்டறியும் விளையாட்டின்" இரண்டு (02) இயல்புகளை எழுதுக.

03. முன்பள்ளிப் பிள்ளைகட்கான விளையாட்டில் பியாஜேயின் கொள்கை பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

04. பிள்ளைகள் வீட்டில் இருக்கும்போது அவர்களால் பயன்படுத்தக்கூடிய ஐந்து (05) விதமான விளையாட்டுச் சாதனங்களைக் குறிப்பிடுக.

05. முன்பள்ளிப் பிள்ளைகளின் மொழி இயலுமையை விருத்தி செய்ய உதவும் காரணிகள் இரண்டினை (02) எழுதுக.

06. முன்பள்ளிப் பிள்ளைகட்குப் பொருத்தமான சமூக விளையாட்டுச் செயற்பாடுகள் நான்கை (04) பட்டியலிடுக.

07. தாளலய அசைவு மூலம் முன்பள்ளிப் பிள்ளைகளிடம் விருத்தி செய்யக்கூடிய திறன்கள் எவை?

08. வகுப்பறையில் பிள்ளைகள் விளையாட்டு சாதனங்களைப் பயன்படுத்தும்போது ஆசிரியரின் வகிபாகங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(8×5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

09. (i) விளையாட்டு என்பதன் கருத்து யாது?

(04 புள்ளிகள்)

(ii) முன்பள்ளிக் கல்வியின் விளையாட்டின் நோக்கங்கள் இரண்டினை (02) கூறுக.

(06 புள்ளிகள்)

(iii) வெளியக விளையாட்டு உபகரணமான ஏறும் சட்டகத்தைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(10 புள்ளிகள்)

10. விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பாக முன்பள்ளி ஆசிரியரின் முன் தயாரிப்பு என்பது முக்கியத்துவம் வாய்ந்தது

(i) முன்பள்ளிப் பிள்ளைகட்கான செயற்பாடுகளை ஆசிரியர்கள் திட்டமிடும் போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இரண்டை (02) உதாரணங்கள் சகிதம் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) உங்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை இழிவளவாக்குவதற்குரிய பொருத்தமான ஆலோசனைகளைக் கூறுக.

(10 புள்ளிகள்)

11. (i) “வெளியக விளையாட்டு” என்பதன் மூலம் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

(ii) வெளியக விளையாட்டின் அனுகூலங்கள் இரண்டை (02) உதாரணங்களுடன் எழுதுக.

(06 புள்ளிகள்)

(iii) முன்பள்ளிப் பிள்ளைகளின் அறிவாற்றல் விருத்தியை மேம்படுத்துவதற்கு எவ்வாறு வெளியக விளையாட்டுக்கள் ஆதரவளிக்கின்றன என்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

12. அட்டவணையில் இடைவெளி நிரப்புக.

(i)

| | இயற்கை விளையாட்டு முறைகள், சாதனங்கள் | உள்ளக விளையாட்டு முறைகள், சாதனங்கள் | வெளியக விளையாட்டு முறைகள், சாதனங்கள் |
|---|---|---|---|
| (அ) | | | |
| (ஆ) | | | |
| (இ) | | | |
| (ஈ) | | | |

(06 புள்ளிகள்)

(ii) முன்பள்ளிப் பிள்ளையின் விருத்திக்கு எவ்விதம் இந்த விளையாட்டுச் சாதனங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றதென்பதை விபரிக்குக.
(06 புள்ளிகள்)

(iii) வெளியக விளையாட்டுச் சாதனங்களை முன்பள்ளிப் பிள்ளைகள் பயன்படுத்தும்போது ஆசிரியரின் வகிபாகங்கள் பற்றி விளக்குக.
(08 புள்ளிகள்)

13. (i) 3 ½ - 4 ½ வயது வீச்சுக்கிடையிலான பிள்ளைகள் ஈட்டக்கூடிய கற்பனைசார் விளையாட்டுச் செயற்பாடுகள் **நான்கை (04)** சுருக்கமாக விபரிக்குக.
(08 புள்ளிகள்)

(ii) 3½ - 4½ வயது வீச்சுக்குட்பட்ட பிள்ளைகளிடம் கற்பனைசார் விளையாட்டைப் பிரபலப்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய உபாயங்களை உதாரணங்களுடன் விபரிக்குக.
(12 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*